முதுகலை முதலாமாண்டு - தமிழ் இலக்கியம்

தொல்காப்பியம் - எழுத்ததிகாரம் : முதற்பருவம்

பாடக் குறியீட்டு எண் : 18MTA12C

அலகு : 4 : 7. உயிர் மயங்கியல்

8. புள்ளி மயங்கியல்

முனைவர். ந. மகாலட்சுமி.
உதவிப் பேராசிரியர்.

REDMI NOTE 8 PRO
ந.மகாலட்சுமி

மொழிக்கு ஈறாக வருகின்ற உயிரெழுத்துக்கள் பன்னிரண்டு. அவ்வீற்றுச் சொற்கள் நிலைமொழியாக நின்று வன்கணம், மென்கணம், இடைக்கணம், உயிர்க்கணம் ஆகிய நான்கு கணத்தோடு அல்வழி, வேற்றுமை என்னும் இரண்டு பொருண்மையாலும் புணரும். அவ்வுயிரீற்றுப் புணர்ச்சிகளை எல்லாம் தனித்தனியே வகைப்படுத்திக் கூறுவதால் உயிர் மயங்கியல் எனப்பெயர்பெற்று.

1. அகர ஈறு:

- அகர ஈற்றுப் பெயர் அல்வழியில் க, ச, த, ப வந்தால் ஒத்த ஒற்று இடைமிகும். (எ-டு) விளக்குறிது, விளச்சிறிது.
- வேற்றுமையிலும் அவ்வாறே வரும்.
- வினையெச்சம், உவமஉருபு, என, அ, ஆங்க ஆகிய அகர ஈற்றுச் சொல்லையடுத்து வல்லெழுத்து மிகும்.

(எ-டு) உண்ணச் சென்றான், புலிபோலப் பாய்ந்தான், கொள்ளெனக் கொண்டான். அத்தாமரை + ஆங்கக்கொண்டான்.

- அகரச்சுட்டின் முன் உயிரை முதலாக உடைய சொல் வந்து புணரும் அப்போது வகர ஒற்று மிகும். (எ-டு) அ+அழகு = அவ்வழகு.
- ~~அகரச் சுட்டின்~~ முன் 1.ஞ, 2.ந,ம என்னும் மெல்லின எழுத்துக்கள் வந்து புணர்ந்தால் இடையில் தத்தமக்குப் பொருத்தமான மெல்லெழுத்துக்கள் மிகும். (எ-டு) அஞ்ஞானம், அந்நூல், அம்மணி.
- அகரச் சுட்டின் முன் ய, வ என்னும் இடையின எழுத்துக்கள் வந்து புணர்ந்தால் இடையில் வகர ஒற்றுத் தோன்றும். (எ-டு) அவ்யாழ், அவ்வடை.
- அகரச்சுட்டு உயிரெழுத்துக்களோடு புணரும் போது வகர ஒற்று மிக்கு முடியும். (எ-டு) அ+அழகு = அவ்வழகு, அ+ஆண்டு = அவ்வாண்டு.
- அகரம் செய்யுளில் ஆ என நீண்டு ஒலிக்கும். (எ-டு) அ+இடை = ஆயிடை.

இயல்பாகும் அகர ஈற்றுச் சொற்கள்:

தொல்காப்பியர் அன்ன எனும் உவமஉருபு, அண்மை விளி, செய்ம்மன எனும் சொல், வியங்கோள், செய்த எனும் பெயரெச்சம், செய்யிய எனும் வினையெச்சம், அம்ம எனும் அசைச்சொல், பல, பல்ல எனும் பலவின்பால் சொற்கள் ஆகிய அனைத்தும் மிகாமல் இயல்பாய் வருமென்று உரைப்பார்.

(எ-டு) பொன்னன்ன குதிரை, செந்நாய், உண்ட குதிரை, பல குதிரை.

- 'சால' எனும் சொல் 'ல'கரம் இழக்கும். (எ-டு) சால+குத்தினான் = சாக்குத்தினான்.
- பல+பல = பலப்பல, சில+சில = சிலச்சில → வல்லெழுத்துமிகுதல்.
- பல+பல = பலபல, சில+சில = சிலசில → இயல்பு.
-

REDMI NOTE 8 PRO

## வேற்றுமையில் அகர ஈறு

- அகர ஈற்றுச் சொற்கள் அல்வழிப் புணர்ச்சியைப் போலவே வல்லெழுத்து மிக்கு முடியும். (எ.டு) வாள + குறை = வாளக்குறை.
- அகர ஈற்று மரப்பெயர் மெல்லினம் பெறும். (எ.டு) விள + கோடு = விளங்கோடு.
- மக என்னும் அகர ஈற்றுப்பெயர் 'இன்' சாரியையும் 'அத்து' சாரியையும் பெற்று வரும். (எ.டு) மக + கை = மகவின்கை, மக + கை = மகத்துக்கை.
- அகர ஈற்றுப் பண்புப் பெயர்கள் அற்றுச் சாரியை பெற்று முடியும். (எ.டு) பல + கோடு = பலவற்றுக்கோடு.

## 2. ஆகார ஈறு

- ஆகார ஈற்றுப் பெயர் அல்வழியில் வல்லெழுத்து மிகும். (எ.டு) காரா + கடிது = காராக்கடிது.
- 'செய்யா' என்னும் வினையெச்சம் வல்லெழுத்துப் பெறும். எ.டு உண்ணா + கொண்டான் = உண்ணாக் கொண்டான்.
- உம்மை என்ற இருபெயர்த் தொகை மொழியிடை அகரம் தோன்றும். (எ.டு) இரா அப்பகல்.

### ஆகார ஈறு இயல்பாகும் இடம்

ஆ, மா, வினைப்பெயர், யா, பலவின்பால் இறுதி, வேண்டிய முதலியவை, உண்கா முதலிய தன்மைச் சொல் ஆகியவை இயல்பாகும். (எ.டு) மா + குறிது = மாகுறிது, யா + குறிது = யாகுறிது.

### ஆகார ஈறு வேற்றுமையில் புணர்தல்:

- ஆகார ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கு வரும். (எ.டு) மூங்கா + தலை = மூங்காத்தலை.
- ஓரெழுத்தடுத்து வரும் ஆகாரம், ஓரெழுத்தொருமொழியை அடுத்தும் அகரம் பெறும். (எ.டு) பலா + கிளை = பலாஅக்கிளை, கா + தலை = காஅத்தலை.
- 'இரா' எனும் ஓரெழுத்தடுத்து வரும் ஆகாரம், அகரம் பெறாமல் வல்லெழுத்து மிக்கு முடியும். (எ.டு) இரா + கொண்டான் = இராக்கொண்டான்.
- 'நிலா' வுக்கு அத்துச் சாரியை வரும். (எ.டு) நிலா + கொண்டான் = நிலாத்துக் கொண்டான்.
- ஆ, மா என்பன அகரம் பெறும். அகரம் பெறாது னகரம் பெறுவதும் உண்டு.
- 'ஆன்' என்பது அகரம் சேர்ந்து 'ஆன' என வரும். (எ.டு) ஆ + நெய் = ஆனநெய். னகரம் மறைவதும் உண்டு (எ.டு) ஆன் + பி = ஆப்பி.
- செய்யுளில் இறுதி ஆகாரம் குறுகி அகரமாகும். அக்குறிலை அடுத்து உகரம் வரும். (எ.டு) இரா + புறம் = இரவுப்புறம்.

REDMI NOTE 8 PRO

## 3. இகர ஈறு

• இகர ஈற்றுப்பெயர்ச்சொற்கள் வேற்றுமைப் புணர்ச்சியில் வல்லெழுத்து மிக்கு முடியும். (எ-டு) கிளி + கால் = கிளிக்கால்.

• 'இனி' எனும் காலச்சொல், 'அணி' எனும் இடச்சொல், வினையெச்சம், சுட்டு ஆகியவையும் அல்வழியில் வல்லெழுத்து மிக்கு வரும். (எ-டு) இனி + கொண்டான் = இனிக் கொண்டான், இ + கொற்றன் = இக்கொற்றன்.

• இன்றி எனும் வினையெச்சம், செய்யுளில் வரும் போது இகரம் உகரமாகத் திரிதலும் உண்டு. (எ-டு) நாளன்றி + போகி = நாளன்று போகி.

• இகரச் சுட்டின் முன் (i) ஞ, ந, ம வரின் மெல்லினம் மிகும், (ii) ய, வ வரினும் உயிர் வரினும் வகரம் பெறும். (iii) செய்யுளின் நீண்டொலிக்கும்.

### அளவைப் பெயர்

• 'தூணி' முன்னர் 'பதக்கு' வரும்பொழுது வல்லெழுத்து மிகும். (எ-டு) தூணி + பதக்கு = தூணிப்பதக்கு.

• 'நாழி' முன்னர் 'உரி' வரும்பொழுது 'ழி' கெட்டு டகரம் தோன்றும். (எ-டு) நாழி + உரி = நாடுரி.

• 'பனி' எனும் கால வேற்றுமைக்கு அத்தும் இன்னும் சாரியையாகும். (எ-டு) பனி + கொண்டான் = பனியத்துக்கொண்டான். பனி + கொண்டான் = பனியிற்கொண்டான்.

• 'வளி' எனும் பூதப்பெயரும் அவ்வாறே வருமென்பார்.

• 'புளி' எனும் மரப்பெயர் 'அம்' சாரியை பெறும். புளி + காய் = புளியங்காய்

• சுவையைக் குறிக்கும் புளிப்பெயர் மெல்லெழுத்து மிகுதலும் வல்லெழுத்து மிகுதலும் உண்டு என்பார். (எ-டு) புளிங்கூழ், புளிக்கூழ்.

### நாட்பெயர்:

இகர ஈற்று நாட்பெயரடுத்து வினைச்சொல் வந்தால் 'ஆன்' சாரியை வருமென்பார். (எ-டு) பரணி + கொண்டான் = பரணியாற்கொண்டான்.

திங்கள் பெயர் வந்தால் இக்குச் சாரியை வருமென்பார். (எ-டு) ஆடி + கொண்டான் = ஆடிக்குக் கொண்டான்.

## 4. ஈகார ஈறு:

• ஈகார ஈற்றுச்சொற்கள் அல்வழியில் புணரும் போது வல்லெழுத்து மிக்கு முடியும். (எ-டு) தீ + கடிது = தீக்கடிது.

REDMI NOTE 8 PRO

- நீ, பீ, மீ என்பவற்றையடுத்து வல்லினம் மிகாது. இயல்பாக வரும்.
(எ-டு) பீ + கொடிது = பீ கொடிது. நீ + கொடியை = நீ கொடியை.
- மீ எனும் இடம் வரை கிளவி வல்லினம் மிகுந்து வருவதும் உண்டு.
(எ-டு) மீ + பல் = மீப்பல்.
- வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கு முடியும். (எ-டு) தீ + சட்டி = தீச்சட்டி.
- நீ என்னும் பெயர் உருபேற்கையில் கூறியது போல் 'நின்' என்று மாறும்.
ஆவயின் வல்லெழுத்து இயற்கையாகும். (எ-டு) நீ + கை = நின்கை.

## 5. உகர ஈறு:

1. உகர ஈற்றுப் பெயர்ச்சொல் அல்வழியில் வல்லெழுத்து மிக்கு முடியும்.
(எ-டு) கடு + கொடிது = கடுக்கொடிது.
- உகரச் சுட்டின் முன் வல்லினம் வந்தால் வல்லெழுத்து மிகும்.
- உகரச் சுட்டின் முன் ஞ, ந, ம வந்தால் மெல்லெழுத்து மிகும்
- உகரச் சுட்டின் முன் ய, வ, உயிர்வரின் வகரம் தோன்றும்.
- செய்யுளில் உகரம் ஊகாரமாகும்.
- அ, இ, உ என்னும் சுட்டு அது, இது, உது என்று வரும்போது இயல்பாகும்.
- அது + அன்று = அதாஅன்று, அது + ஐ = அதை எனப்புணரும். (எ-டு) கடு + காய் = கடுக்காய்.
- வேற்றுமையிலும் வல்லெழுத்து மிக்குப் புணரும்
- எரு எனும் சொல் 'அம்' சாரியை பெறும் என்றும், 'செரு' 'அம்' சாரியை பெற்று மகரம் இழந்து வல்லினம் மிகும் என்று கூறுகிறார் தொல்காப்பியர்.
- ழகர உகரம் நீண்டு முடியும். உகரம் அல்வழி வரும்.
(எ-டு) பழு + பல் = பழூஉப்பல்.
- உகர ஈற்றுச் சுட்டுப்பெயர் உருபியலில் கூறியது போல் உகரம் கெட்டு 'அன்' சாரியை பெறும். (எ-டு) அது + கோடு = அதன்கோடு.

## 6. ஊகார ஈறு:

- ஊகார ஈற்றுப் பெயர்கள் அல்வழியில் வல்லெழுத்து மிக்கு முடியும்.
(எ-டு) கொண்மூ + கடிது = கொண்மூக்கடிது.
- வினையெச்சமும் முன்னிலை வினையும் அல்லாதே வல்லினம் மிகும்.
(எ-டு) உண்ணூக் கொண்டான்.
- ஊகார ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையிலும் வல்லெழுத்து மிக்கு முடியும்.
(எ-டு) கொண்மூ + கூட்டம் = கொண்மூக்கூட்டம்.
- ஈரெழுத்திம்பரும் ஓரெழுத்தொரு மொழிக்கும் உகரம் தோன்றும் என்பார் தொல்.
- பூ எனும் சொல் வல்லினம் வரின் மெல்லெழுத்து மிகுதலும் வல்லினம் மிகுதலும் உண்டு. (எ-டு) பூக்கொடி, பூங்கொடி.
- 'ஊ' எனும் பெயர் 'ஆ' எனும் சொல் போல் னகர மெய் பெறும்.
(எ-டு) ஊ + குறை = ஊன் குறை
- அக்கு சாரியை பெறுவதும் உண்டு. (எ-டு) ஊ + குறை = ஊக்குறை.

REDMI NOTE 8 PRO
ந. மகாலட்சுமி

• ஆடூஉ, மகடூஉ எனும் இரு பெயரும் 'இன்' சாரியை பெறுவதும் உண்டு. வல்லினம் மிகுவதும் உண்டு (எ-டு) ஆடூஉ + கை = ஆடூஉவின் கை
ஆடூஉக்கை.

## 7. எகர, 8. ஒகர ஈறு:

• தேற்ற எகரமும் சிறப்பின் ஒவ்வும் வல்லினம் மிகாது இயல்பாக வரும். (எ-டு) யானோ கொண்டேன், நீயோ கொடியை.

– தெளிவு, சிறப்புப்பொருள் அல்லாதவிடத்து எகர ஒகரம் பெயர்க்கு ஈறாகா. ஏனைச் சொல்லால் முன்னிலையால் வரும் என்பார் தொல். (எ-டு) எஎக் கொற்றா, ஒஒக் கொற்றா.

## 9. ஏகார ஈறு:

- ஏகார ஈற்றுப்பெயர் அல்வழியில் வல்லெழுத்து மிக்கு முடியும் (எ-டு) சேக்கழுது.
- எதிர்மறை எச்சம், வினாப் பொருள், எண்ணுப் பொருள் தரும் ஏகார இடைச்சொல் வல்லினம் மிகாது இயல்பாக வரும்.
(எ-டு) நீயே கொண்டாய், நிலனே நீரே தீயே வளியே.
- ஏகார ஈற்றுப் பெயர் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கு முடியும்.
(எ-டு) வே + குடம் = வேக்குடம்.
- ஏயென் இறுதிக்கு எகரம் வருமே (எ-டு) ஏஎக்கொட்டில்.
- 'சே' எனும் ஏகார ஈற்று மரப்பெயர் மெல்லெழுத்து மிக்குப் புணரும்
(எ-டு) சே + கிணை = சேங்கிணை.
- 'சே' எனும் பெற்றத்தைக் குறிக்கும் சொல் 'இன்' சாரியை பெற்று முடியும்.
(எ-டு) சே + கொம்பு - சேவின் கொம்பு.

## 10. ஐகார ஈறு:

• ஐகார இறுதிப் பெயர் வேற்றுமையில் வல்லினம் மிகும். (எ-டு) யானைக்கோடு.
- அவை, இவை, உவை எனும் பெயர்கள் உருபேற்றால் உரியது போல் வற்றுச் சாரியை பெற்று முடியும். (எ-டு) அவை + கோடு = அவையற்றுக் கோடு.
• வழை, ஞெமை, நமை எனும் மரப்பெயர்கள் மெல்லெழுத்து மிக்கு முடியும்.
(எ-டு) வழை + கோடு = வழைங்கோடு, நமை + கோடு = நமைங்கோடு.
• பனை + காய் → பன்ஐ + காய் → பன் + அம் + காய் → பனங்காய்
• ஆவிரை + கோடு → ஆவிர்ஐ + கோடு → ஆவிர் + அம் + காய் → ஆவிரங்கோடு.
• அரை + கோடு → அரை + அம் + கோடு → அரையங்கோடு.
• பனை + அட்டு → பன்ஐ + அட்டு → பன்ஆ + அட்டு → பனாஅட்டு.
• பனை + கொடி → பனைக்கொடி.
• சித்திரை + கொண்டான் = சித்திரைக்குக் கொண்டான். திங்கள் பெயர் இக்குச்சாரியை பெறும். கேட்டை + கொண்டான் = கேட்டையாற் கொண்டான். நாட்பெயர் ஆன் சாரியை பெறும்.

• மழை எனும் சொல் அத்து, இன் எனும் சாரியைகளைப் பெற்றுப் புணரும். (எ-டு) மழையத்துக் கொண்டான், மழையாற் கொண்டான்.

• செய்யுளில் வேட்கை + அவா → வேணவா என்று புணரும்.

## 11. ஓகார ஈ.று:

• ஓகார ஈற்றுப் பெயர்கள் அல்வழியில் வல்லெழுத்து மிக்குப் புணரும். (எ-டு) ஓ + சிறிது = ஓச்சிறிது.

• எதிர்மறை, வினா, ஐயப்பொருள் தரும் ஓகார இடைச்சொல் வல்லினம் வர இயல்பாகும். (எ-டு) யானோ கொண்டேன்.

• ஒழியிசைப் பொருளில் வரும் ஓகார இடைச்சொல் இயல்பாய் முடியும். (எ-டு) படிக்கவோ சென்றாய்.

• வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கும். அல்லாதது ஓகாரத்தை அடுத்து ஒகரம் வரும். (எ-டு) ஓ + கடுமை = ஓஒக்கடுமை.

• கோ + இல் = கோயில் எனப் புணரும். இயல்பாக வரும்.

• சில ஓகார ஈ.றுகள் 'ஒன்' சாரியை பெற்று இயல்பாய் வரும். (எ-டு) கோ + கை → கோ + ஒன் + கை → கோஒன்கை.

## 12. ஔகார ஈ.று:

ஔகார இறுதிப்பெயர் வேற்றுமையிலும் அல்வழியிலும் வல்லினம் மிகும். அங்கு உகரம் வருதல் சிறந்தது என்பார் தொல். (எ-டு) கௌ + கடிது = கௌவுக்கடிது.
கௌ + கடுமை = கௌவுக்கடுமை.

---

## வினாக்கள்

1. உயிர்மயங்கியல் பெயர்க்காரணம் கூறுக.
2. 'நீட வருதல் செய்யுளுள் உரித்தே' — விளக்குக.
3. இயல்பாக முடியும் அகர ஈற்றுச் சொற்கள் — விளக்குக.
4. அளவு, காலப்பெயர்களின் புணர்ச்சிகளைச் சுட்டுக.
5. பனங்காய், பனஅட்டு, பனைக்கொடி — புணர்ச்சி விதி கூறுக.
6. அல்வழியில் அகர ஈற்றுப்பெயர்ப் புணர்ச்சி — விளக்குக.

REDMI NOTE 8 PRO
ந.மகாலட்சுமி

7. அகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணரும் விதத்தை விளக்கு.
8. பல சில ஆகியவற்றுக்கு உரிய சிறப்புப் புணர்ச்சி விதிகள் யாவை?
9. ஆகார ஈற்றுச் சொற்கள் அல்வழியில் புணரும் நிலையை எழுதுக.
10. ஆகார ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணரும் நிலையை எழுதுக.
11. இகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணரும் விதத்தை விளக்கு.
12. ஈகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
13. உகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் புணரும் விதிகளைத் தொகுக்க.
14. உகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணரும் விதிகளைத் தொகுக்க.
15. ஊகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
16. ஏகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
17. ஐகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
18. ஒகர ஈற்றுச் சொற்களின் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
19. ஔகார ஈறு அல்வழியிலும் வேற்றுமையிலும் எவ்வாறு முடியும்.

---

REDMI NOTE 8 PRO

# 8. புள்ளி மயங்கியல்

சொற்களில் ஈறாக நிற்கும் மெய்யெழுத்துக்கள் பதினொன்று. அவை 1. மெல்லின ஈறுகள்: ஞ், ண், ந், ம், ன், 2. இடையின ஈறுகள் ய், ர், ல், வ், ழ், ள் என்பனவாகும். அவற்றுடன் வல்லினத்தையும் ஏனை இன எழுத்துக்களையும் முதலாக உடைய சொற்கள் வந்து அல்வழி, வேற்றுமை என்னும் இருநிலையாலும் புணரும் இயல்புகளை எடுத்துரைப்பதால் புள்ளி மயங்கியல் எனப் பெயர் பெற்றது.

## 1. மெல்லின ஈறுகள்:

### (i) ஞகர ஈறு:

- ஞகர ஈற்று தொழிற்பெயர்கள் இருவகைப் பொருண்மையாலும் புணரும் போது உகரத்தைப் பெறும். வருமொழிக்கேற்ற வல்லெழுத்து மிக்கும் முடியும்.

(எ-டு) உரிஞ் + கடிது = உரிஞுக்கடிது.

- ஞகர ஈற்றின் முன் 'ஞ', 'ந', 'ம', 'வ' என்னும் சொற்கள் வந்து புணரும் போது நிலைமொழி ஈறு உகரம் பெற்று முடியும்.

(எ-டு) உரிஞ் + ஞாற்சி = உரிஞு ஞாற்சி.

### (ii) நகர ஈறு:

- நகர ஈற்றுச்சொற்கள் அல்வழியில் வல்லெழுத்து வர அவ்வெழுத்து மிக்கு முடியும். நிலைமொழியின் ஈற்றில் உகரத்தைப் பெறும். 'ஞ', 'ந', 'ம' என்னும் எழுத்துக்கள் வர உகரம் மட்டும் பெற்று வரும்.

(எ-டு) பொருநுக்கடிது, பொருநு ஞான்றது.

- நகர ஈற்றுத்தொழிற்பெயர் வேற்றுமையில் அகரம் பெற்று வரும்.

(எ-டு) பொருந் + கடுமை = பொருநக்கடுமை.

- வெரிந் + குறை → வெரி + குறை → வெரிங்குறை, வெரிக்குறை எனப் புணரும்.

### (iii) ணகர ஈறு:

- ணகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் புணரும் போது ணகர மெய் டகர மெய்யாகத் திரியும். (எ-டு) மண் + குடம் = மட்குடம்.
- ணகர ஈற்று விரவுப்பெயர் அஃறிணையைக் குறித்து வந்து, வேற்றுமைப் பொருண்மையால் புணரும் இடத்தில் ஈறு திரியாமல் இயல்பாகப் புணரும்.

(எ-டு) ஆண் + கை = ஆண்கை, பெண் + கை = பெண்கை.

- 'ஆண்' என்னும் மரப்பெயரில் 'அம்' சாரியை பெற்று புணரும்.

(எ-டு) ஆண் + கோடு = ஆணங்கோடு.

REDMI NOTE 8 PRO

- செய்யுளில் 'விண்' என்னும் பெயர் முன் வினைச்சொல் வந்து புணரும்போது 'அத்துச்' சாரியை பெற்றும், பெறாமலும் வரும்.

(எ-டு) விண்ணகத்துக் கொட்கும், விண்குத்து நீள்வரை.

- ணகர ஈற்றுத் தொழிற்பெயர் இரு பொருண்மையாலும் புணரும்போது (i) வல்லினம் வர உகரத்தோடு, வல்லெழுத்து பெறும். (ii) மெல்லினமும், இடையினமும் வர உகரத்தை மட்டும் பெறும்.
- ணகர ஈற்றுக் கிளைப்பெயர்கள் முன் வல்லினம் வந்து இயல்பாக முடியும்.

(எ-டு) உமண் + குடி = உமண்குடி.

- 'எண்' என்னும் உணவுப்பெயர் முன் வல்லெழுத்து வந்து அல்வழியில் புணரும் போது ணகரம் டகரமாகத் திரியும்.

(எ-டு) எண் + கடிது = எட்கடிது.

- 'முரண்' என்னும் தொழிற்பெயர், அல்வழியில் இயல்பாகவும் வேற்றுமையில் ணகரம் டகரமாகவும் திரிந்து முடியும்.

(எ-டு) முரண் + கடிது = முரண்கடிது, முரண் + கடுமை = முரட்கடுமை.

(iv) மகர ஈறு:

- மகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் இறுதி மகரம் அழிய வல்லினம் வருவதும், மெல்லினம் வருவதும் உண்டு. (எ-டு) குளக்கரை, குளங்கரை
- அல்வழியில் உயிர் வந்தால் இயல்பாக இருக்கும். (எ-டு) குளம் + அழகிது = குளமழகிது.
- அகரம், ஆகாரம் வரும் பொழுது இறுதியாகவுள்ள அகரம் நீண்டு ஒலிக்கும்.

(எ-டு) மரம் + அடி = மரஅடி, மரம் + அடி = மராஅடி.

- இல்லம் என்னும் மரப்பெயர் வேற்றுமையில் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

(எ-டு) இல்லம் + கோடு = இல்லங்கோடு.

- மகர ஈற்று மரப்பெயர் அல்வழியில் மெல்லெழுத்து மிக்கு முடியும்.

(எ-டு) மரம் + சிறிது = மரஞ்சிறிது.

- அகம் முன் கை என்னும் பெயர் புணர்தல்.

அகம் + கை → அ + கை → அங்கை.

அகம் + கை → அக + கை → அகங்கை.

- செய்யுளில் 'இலம்' என்ற சொல்லோடு 'படு' என்ற சொல் வரும்பொழுது மகரம் மறையாமல் 'இலம்படு' என்று வரும்.
- ஆயிரம் என்பதன் முன் பிற எண்ணுப்பெயர் வருதல்.

ஆயிரம் + ஒன்று → ஆயிர + அத்து + ஒன்று → ஆயிரத்து + ஒன்று → ஆயிரத்தொன்று.

- அடையுடன் கூடிய ஆயிரம் புணருதல்.

பத்து + ஆயிரம் → பதினாயிரம் + ஒன்று → பதினாயிரம் + அத்து + ஒன்று → பதினாயிரத்தொன்று.

REDMI NOTE 8 PRO
பி.மகாலட்சுமி

- ஆயிரத்தோடு அளவு, நிறைப் பெயர்கள் புணர்தல்
1. ஆயிரம் + கலம் -> ஆயிரக்கலம் (அளவு)
2. ஆயிரம் + கழஞ்சு -> ஆயிரக்கழஞ்சு.

- மகர ஈற்று மூவிடப் பெயர்கள்: எல்லாரும், எல்லீரும், தாம், நாம், யாம் என்பன வேற்றுமையில் நெடில் குறுகி மெல்லினம் பெற்று வரும் (எ-டு) தாம் + கை -> தம் + கை -> தங்கை. அல்வழியில் இயல்பாய் வரும். (எ-டு) தாம் + பெரியர் -> தாம் பெரியர்.
- 'எல்லாம்' என்னும் பொதுப் பெயர், வேற்றுமையில் இடையே 'வற்றுச்' சாரியையும் ஈற்றில் 'உம்' சாரியையும் பெறும். அல்வழியில் ஈற்றில் மட்டும் 'உம்' சாரியை பெறும், மெல்லெழுத்து மிக்கும் முடியும். (எ-டு) எல்லாம்பெரியவும்.
- 'எல்லாம்' என்னும் உயர்திணைப்பெயர் இடையில் 'நம்' சாரியையும் இறுதியில் 'உம்' சாரியையும் பெறும் (எ-டு) எல்லாம் + கை = எல்லா நங்கையும். அல் வழியில் 'நம்' சாரியை பெறாது. (எ-டு) எல்லாம் + கொல்லர் => எல்லாக் கொல்லரும்.
- நும் என்னும் பெயர் மெல்லினம் மிகும். (எ-டு) நும் + கை = நுங்கை.
- நும் என்பது அல்வழியில் நீயிர் என்று மாறும். (எ-டு) நும் + பெரியர் = நீயிர் பெரியர்.
- மகர ஈற்று தொழிற்பெயர்கள் இருவழியிலும் ஞகர ஈற்றுத் தொழிற்பெயரைப் போல முடியும்.
- ஈம், கம், உரும் என்பன தொழிற் பெயர் போல உகரச்சாரியை பெறும்.
- ஈம், கம் என்பன அக்குச் சாரியையும் பெறும் (எ-டு) ஈம் + குடம் = ஈமக்குடம்.
- வகரத்தின் முன் மகரம் கெடும். (எ-டு) நிலம் + வலிது = நிலம்வலிது.
- நாட்பெயர் வருகின்ற பொழுது 'ஆன்' சாரியையும், 'அத்துச்' சாரியையும் பெற்று வரும். (எ-டு) மகம் + கொண்டான் = மகத்தான் கொண்டான்.

## V. னகர ஈறு:

- னகர ஈறு வேற்றுமையில் புணரும் போது னகரம் றகர மெய்யாய்த் திரியும். (எ-டு) பொன் + காசு = பொற்காசு.
- மன், சின், ஆன், ஈன், பின், முன், வயின் என்ற ஏழு னகர ஈற்றுச் சொற்களும் அல்வழியில் புணரும் போது னகரம் றகர மெய்யாகத் திரியும். (எ-டு) முன் + கொண்டான் = முற்கொண்டான், வயின் + கொள்ளும் = வயிற்கொள்ளும்.
- அவ்வயான், இவ்வயான், உவ்வயான், எவ்வயான் என்ற நிலைமொழியின் னகரம் றகரமாகத் திரியும். (எ-டு) அவ்வயாற் கொண்டான், எவ்வயாற் கொண்டான்.
- குயின் என்னும் அஃறிணைச்சொல் இயல்பாய் புணரும். (எ-டு) குயின்குழாம்.
- எகின் என்னும் மரப்பெயர் அம் சாரியை பெறும். (எ-டு) எகினங்கோடு.
- எகின் என்னும் பறவைப் பெயர் அகரம் பெறும். (எ-டு) எகின் + கால் = எகினக்கால்.
- னகர ஈற்று கிளைப் பெயர்கள் இயல்பாய்ப் புணரும். (எ-டு) எயின் + குடி = எயின்குடி.

- மீன் என்னும் சொல் உறழ்ந்து முடியும். (எ-டு) மீன்+கண் = மீன்கண், மீற்கண்.
- 'தேன்' என்னும் சொல்லுக்கு வேற்றுமை முடிபு:

தேன்+குடம் = தேன்குடம், தேற்குடம் } உறழ்ச்சி.
தேன்+சாடி = தேன்சாடி, தேற்சாடி }
தேன்+குடம் = தே~~ன்~~குடம் → தேக்குடம். [னகரம் கெட வல்லெழுத்து மிக்கது]
தேன்+குடம் = தே+குடம் → தேங்குடம். மெல்லினம் மிக்கது.
தேன்+மா = தேன்மா, தேமா. [மெல்லினத்தோடு புணருதல்]
தேன்+இறால் = தேனிறால். [இயல்பாக வருதல்]
தேன்+இறால் → தே+த்+த்+இறால் = தேத்திறால். [தகர ஒற்று இரட்டித்தல்]

- மின், பின், பண், கன் ஆகிய சொற்கள் தொழிற்பெயர் போல உகரம் பெற்று வரும். கன் என்பது அகரம் போல மெல்லெழுத்தோடு உறழ்ந்து வரும்.
(எ-டு) கன்+தட்டு = கன்னத்தட்டு, கன்னந்தட்டு.
- இயற்பெயரோடு தந்தை என்னும் முறைப்பெயர் வந்தால் இறுதியில் உள்ள 'அன்' என்பதும் ஒற்றும் கெடும். (எ-டு) சாத்தன்+தந்தை = சாத்தந்தை.
- ஆதன், பூதன் என்பதோடு தந்தை வந்தால் ஒற்றை முத்தும் சேர்ந்து கெடும்.
(எ-டு) ஆந்தை, பூந்தை.
- சிறப்போடு வந்தால் மாற்றம் இன்றி இருக்கும். (எ-டு) பெருஞ்சாத்தன் தந்தை.
- இயற்பெயர் முன் மக்கள் என்ற முறைப்பெயர் வரும் பொழுது 'அன்' அழிந்து அம் சாரியை பெறும். (எ-டு) சேந்தன்+கண்ணன் = சேந்தங்கண்ணன்.
- தான், பேன், கோன் ஆகியவை மாறாது வரும். (எ-டு) தான்+தந்தை = தான்தந்தை.
- தான், யான் என்பது நெடுமுதல் குறுகியும், திரிந்தும் இயல்பாகவும் முடியும். தான்+இறையன் = தான்இறையன்.
(எ-டு) தான்+கை = தன்கை, யான்+கை = என்கை,
- 'அழன்' என்பது னகரம் கெட வல்லினம் மிகும். (எ-டு) அழன்+குடம் = அழக்குடம்.
- முன் என்னும் சொல் இல்லோடு புணர்தல்.
(எ-டு) முன்+இல் → முன்+ற்+இல் → முன்றில்.
- செய்யுளில் 'பொன்' என்னும் சொல் திரிதல்.

பொன்+படை → பொலம்+படை → பொலம்படை.
இவ்விடத்தில் னகர மெய் கெட்டு. லகர உயிர்மெய்யும் மகர ஒற்றும் தோன்றும்.
பொன்+தேர் = பொலந்தேர், பொன்+சுடர் = பொலஞ்சுடர்.

REDMI NOTE 8 PRO

## 2. இடையின ஈற்றுகள்:

### (i) யகர ஈறு:

- யகர ஈற்றுச் சொற்கள் வேற்றுமையில் வல்லெழுத்து மிக்கு முடியும்.
(எ-டு) நாய்+கால் = நாய்க்கால்.
- தாய் என்னும் பெயர் வல்லெழுத்தோடு புணரும் போது இயல்பாய் முடியும்.
(எ-டு) தாய்+கை = தாய்கை.
- தாய் என்னும் பெயர் மகன் என்னும் அடையைப் பெற்று நிலைமொழியில் நிற்க, வருமொழியில் வல்லெழுத்து வந்தால் வல்லினம் மிகும்.
(எ-டு) மகன்தாய் + கலாம் = மகன்றாய்க் கலாம்.
- யகர ஈற்றுச் சொல் சில வல்லெழுத்தும், மெல்லெழுத்தும் உறழ்ச்சியில் மிகும்.
(எ-டு) வேய்+குறை = வேய்க்குறை, வேய்ங்குறை.
- யகர ஈற்றுப் பெயர்ச் சொற்கள் அல்வழியில் இயல்பாய் முடியும்.
(எ-டு) நாய்+ கடித்தது = நாய் கடித்தது.
- நான்காம் வேற்றுமைப் பொருள்பட வந்த இடைச்சொல், வினையெச்சம், இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆகியவற்றில் வல்லெழுத்து மிக்கு முடியும்.

### (ii) ரகார ஈறு

- ரகரத்தை ஈறாக உடைய பெயர்கள் வேற்றுமையில் புணரும் போது வல்லெழுத்து மிக்கு முடியும். (எ-டு) தேர்+கால் = தேர்க்கால்.
- ஆர், வெதிர், சார், பீர் என்னும் ரகர ஈற்றுப் பெயர்ச்சொற்கள் வேற்றுமையில் புணரும் போது மெல்லெழுத்துத் தோன்றும். (எ-டு) ஆர்+கோடு = ஆர்ங்கோடு. பீர்+கோடு = பீர்ங்கோடு, சார்+கோடு = சார்ங்கோடு, வெதிர்+கோடு = வெதிர்ங்கோடு.
- 'சார்' என்பது வல்லெழுத்து மிக்கும் முடியும். (எ-டு) சார்+காழ் = சார்க்காழ்.
- பீர் என்பது 'அம்' சாரியை பொருந்தியும் வரும். (எ-டு) பீர்+கொடி = பீரங்கொடி.

### (iii) லகார ஈறு:

- லகரத்தை ஈறாக உடைய சொற்கள் வேற்றுமையில் றகர ஒற்றாய்த் திரியும்.
(எ-டு) கல்+குறை = கற்குறை, நெல்+கதிர் = நெற்கதிர்.
- லகர ஈற்றுச் சொற்கள் மெல்லெழுத்தோடு புணரும் போது னகர ஒற்றாகத் திரியும்.
(எ-டு) கல்+நெரி = கன்னெரி.
- லகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் இயல்பாயும் லகரம் றகரமாய்த் திரிந்தும் வரும். (எ-டு) கல் + குறிது = கல்குறிது, கற்குறிது.
- லகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் தகர ஒற்றின் முன் லகரம் றகரமாவதுடன் ஆய்தமாகவும் திரியும். (எ-டு) கல்+தீது = கற்றீது, கஃறீது.
- தனிநெடிலை அடுத்து வரும் லகர ஈற்றுப் பெயர் இயல்பாக முடியும்.
(எ-டு) பால்+கடிது = பால்கடிது.

REDMI NOTE 8 PRO

- 1. நெல், 2. செல், 3. கொல், 4. சொல் என்னும் இறுதி அடுத்த லகர ஈற்றுச்சொற்கள் அல்வழியில் பொருண்மையால் றகரமாகத் திரியும். (எ-டு) நெல் + காய்ந்தது = நெற்காய்ந்தது.
- இல் என்பது 'ஐ' சாரியை வருகின்ற பொழுது வல்லினம் மிகுந்தும், மிகாமலும் வரும். (எ-டு) இல் + பொருள் = இல்லை பொருள், இல்லைப்பொருள்.
- இயல்பாகவும் ஆகாரம் பெற்றும் முடியும் (எ-டு) இல்பொருள், இல்லாப்பொருள்.
- 'வல்' எனும் சொல் இருவழிப் பொருண்மையால் ஞகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போலப் புணரும்.
- 'வல்' முன் நாய், பலகை என்னும் சொற்கள் புணரும் போது உகரம் கெட்டு அகரம் தோன்றும் (எ-டு) வல் + நாய் = வல்ல நாய், வல் + பலகை = வல்லப் பலகை.
- பூல், வேல், ஆல் என்பன 'அம்' சாரியை பெறும். (எ-டு) பூல் + கோடு = பூலங்கோடு.
- 'வெயில்' என்னும் சொல் அத்துச் சாரியையும் இன் சாரியையும் பெற்று முடியும். (எ-டு) வெயில் + கொண்டான் = வெயிலத்துக் கொண்டான், வெயிலிற் கொண்டான்.

## (iv) வகர ஈறு :

- அவ், இவ், உவ் என்பன வேற்றுமையில் புணரும் போது வற்றுச்சாரியை பெற்று வரும். (எ-டு) அவ் + கோடு = அவற்றுக்கோடு.
- வகர ஈற்றுச் சுட்டுப்பெயர்கள் அல்வழியில் வல்லினம் வந்தால் ஆய்தமாகும். மெல்லினம் வந்தால் மெல்லின மெய்யாய்த் திரியும். இடையினமும் உயிரினமும் வந்தால் இயல்பாக வரும் (எ-டு) அவ் + கடிய = அஃகடிய, அவ் + ஞாண் = அஞ்ஞாண். அவ் + யாழ் = அவ்யாழ்.
- தெவ் என்னும் சொல் உகரச் சாரியை பெறும். (எ-டு) தெவ் + கடிது = தெவ்வுக் கடிது.

## (v) ழகர ஈறு

- ழகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் வல்லெழுத்துமிக்கு முடியும். (எ-டு) பூழ் + கால் = பூழ்க்கால், கூழ் + பானை = கூழ்ப்பானை.
- 'தாழ்' என்னும் சொல் முன் 'கோல்' என்னும் சொல் வருகின்ற பொழுது அக்குச் சாரியை பெறும். (எ-டு) தாழ் + கோல் = தாழக்கோல்.
- தமிழ் என்னும் சொல் அக்குச் சாரியை பெற்று முடியும். (எ-டு) தமிழ் + கூத்து = தமிழக்கூத்து.
- குமிழ் என்னும் மரப்பெயர் மெல்லெழுத்து மிக்கும் 'அம்' சாரியை பெற்றும் வரும். (எ-டு) குமிழ் + கோடு = குமிழ்ங்கோடு, குமிழ் + கோடு = குமிழங்கோடு.
- பாழ் என்பது வல்லெழுத்தும், மெல்லெழுத்தும் மிக்கு வரும். பாழ் + கிணறு = பாழ்க்கிணறு, பாழ்ங்கிணறு.
- 'ஏழ்' எனும் எண்ணுப்பெயர் 'அன்' சாரியை பெற்று முடியும். (எ-டு) ஏழ் + காயம் = ஏழன் காயம்.

REDMI NOTE 8 PRO
ந. மகாலட்சுமி

- 'ஏழ்' என்னும் அளவு, நிறை, எண் ஆகிய மூவகைப் பெயருடன் புணரும் போது ஏழ் என்பதன் முதலெழுத்துக் குறுகும். ஈற்றெழுத்தோடு உகரம் சேரும்.
1. ஏழ்+கலம் = எழுகலம் (அளவு), 2. ஏழ்+கழஞ்சு = எழுகழஞ்சு (நிறை) 3. ஏழ்+மூன்று = எழுமூன்று (எண்)

- ஏழ் + பத்து -> எழு + பத்து -> எழு + பஃது -> எழுபஃது.
- ஏழ் + ஆயிரம் -> எழ் + ஆயிரம் -> எழாயிரம்.
- ஏழ் + நூறாயிரம் -> ஏழ் நூறாயிரம். [இயல்பாக வரும்]
- ஏழ் என்பது நிலைமொழியாய் நின்று தாமரை, வெள்ளம், ஆம்பல் என்னும் பேரெண்கள் வருமொழியாய் வர, எவ்விதத் திரிபும் இன்றி இயல்பாகப் புணரும்.
- 'ஏழ்' என்பது உயிருடன் புணரும் போது இயல்பாகும். ஏழ்+அகல் = ஏழகல்.
- கீழ் என்னும் சொல் வல்லினம் மிகுந்தும், இயல்பாயும் வரும்.
(எ-டு) கீழ் + குளம் = கீழ்க்குளம், கீழ்குளம்.

(vi) ளகர ஈறு:

- ளகர ஈற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணரும் போது ளகர ஈறு டகர ஈறாகத் திரியும். (எ-டு) முள்+குறை = முட்குறை.
- ளகர ஈற்றுப் பெயர் முன் மெல்லினம் வந்தால் ளகரம் ணகரமாகத் திரியும். (எ-டு) முள் + நுனி = முண்ணுனி.
- ளகர ஈறு அல்வழியில் இயல்பாயும் திரிந்தும் வரும்.
(எ-டு) முள்+கடிது = முள்கடிது, முட்கடிது.
- ளகர ஈற்றுச் சொல் முன் தகரத்தை முதலாக உடைய சொல் வந்து புணரும் போது ளகர ஈறு டகரமாகத் திரிவதோடு ஆய்தமாகத் திரிதலும் உண்டு.
(எ-டு) முள் + தீது = முட்டீது, முஃடீது.
- தனிநெடிலை அடுத்து நிற்கும் ளகர ஈற்றுச் சொற்கள் அல்வழியில் இயல்பாய்ப் புணரும். (எ-டு) வாள்+கடிது = வாள்கடிது.
- சில சொற்கள் டகரமாகத் திரியும். (எ-டு) நாள்+கடிது = நாட்கடிது.
- ளகர ஈற்றுத் தொழிற்பெயர் இருபொருண்மையிலும் ணகர ஈற்றுத் தொழிற் பெயரைப் போல மாற்றம் அடையும்.
- 'இருள்' என்பது 'அத்து'ச் சாரியையும் இன் சாரியையும் பெற்று முடியும்.
(எ-டு) இருள்+கொண்டான் = இருளத்துக் கொண்டான், இருளிற் கொண்டான்.
- 'புள்', 'வள்' என்பது தொழிற்பெயர் போல புணரும்.
- மக்கள் என்பது உயர்திணை இருபாற் பொதுப்பெயர். வல்லெழுத்தோடு புணரும் போது ளகரம் டகரமாகத் திரியும்.
(எ-டு) மக்கள்+கை = மக்கட்கை, மக்கள்+செவி = மக்கட்செவி.

REDMI NOTE 8 PRO

# வினாக்கள்

1. புள்ளிமயங்கியல் பெயர்க்காரணம் விளக்குக.
2. 'தொழிற்பெய ரெல்லாந் தொழிற்பெய ரியல' - விளக்குக.
3. ஈம், கம், உரும் என்னும் பெயர்கள் புணருமாற்றை விளக்குக.
4. அளவு, நிறைப்பெயர்களின் புணர்ச்சிகள் இவற்றை எழுதுக.
5. ஆந்தை, பூந்தை - புணர்ச்சி விதி கூறுக.
6. யகர ஈற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.
7. நகர ஈற்றுப் புணர்ச்சி குறித்து எழுதுக.
8. எல்லாரும், எல்லீரும், தாம், நாம், யாம், நும் - புணர்ச்சி விதிகளைக் கூறுக.
9. மகரவீற்று நாட்பெயர்கள் எவ்வாறு புணரும்.
10. குயின், எகின், பயின், மின், தேன் - புணர்ச்சி விதிகளைக் கூறுக.
11. ணகர, னகர அல்லது லகர, ளகர ஈற்றுப் புணர்ச்சி குறித்து விளக்குக.
12. தேன் என்னும் சொல் புணரும் விதத்தை விளக்குக.
13. தொல்காப்பியர் புள்ளியீற்றுச் சொற்களின் புணர்ச்சிகளை எவ்வாறு வகைப்படுத்துகிறார்?
14. மகரவீற்றுப் பெயர்கள் வேற்றுமையில் புணரும் விதத்தை விளக்குக.
15. மகரவீற்றுப் பெயர்கள் அல்வழியில் புணரும் விதத்தை விளக்குக.
16. மகரவீற்று உயர்திணை, விரவுப்பெயர், தொழிற்பெயர்களுக்குக் கூறப்பட்ட சிறப்புப் புணர்ச்சி விதிகளைத் தொகுக்க.
17. ளகரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
18. லகரவீற்றில் முடியும் சொற்களுக்கான புணர்ச்சி விதிகளை எழுதுக.
19. ழகரவீற்றுப் பெயர்கள் அல்வழியில் புணரும்போது உண்டாகும் மாற்றங்களைத் தொகுக்க.

---

REDMI NOTE 8 PRO